# மருதமுனை வரலாற்று நோக்கில்

## ஐ.ஏ.அமீன் (BA) (ADO)

### வாழ்வும், சமூகப்பணியும்
### (1949 - 2005)



ஏ.ஏ.எம்.மலீஸ்

# மருதமுனை வரலாற்று நோக்கில் ஐ.ஏ.அமீன் (BA) (ADO) வாழ்வும், சமூகப்பணியும் (1949 - 2005)


*தொகுப்பாசிரியர்*

**ஏ.ஏ.எம். மலீஸ்**

*(Q/S ETDI) (Diploma-in-Psychology)*

*Coordinator (BHOFR)*



வெளியீடு :

பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டம் (BHOFR)

மருதமுனை

இலங்கை

2023

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மருதமுனை வரலாற்று நோக்கில்<br>ஐ.ஏ.அமீன் (BA) (ADO) வாழ்வும்,<br>சமூகப்பணியும் (1949 - 2005) |
| ஆசிரியர் | : | ஏ.ஏ.எம்.மலீஸ் |
| முதல் பதிப்பு | : | ஜனவரி 2023 |
| முகவரி | : | இல. 454, ஸம் ஸம் வீதி, மருதமுனை - 03 |
| மின்னஞ்சல் | : | maleesameen454@gmail.com |
| வாட்ஸ்அப் இல | : | Malees Ameen - 077-2788950 |
| வெளியீடு | : | பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டம் (BHOFR),<br>மருதமுனை, |
| அச்சுப்பதிப்பு | : | KidzMate - Maruthamunai |
| அட்டைப்படம் | : | எம்.என்.சதீல் முஹம்மட் |
| தட்டச்சு | : | எம்.என்.எம்.நாஜித் (BA, Hons) |
| விலை | : | **1000/-** |
| ISBN | : | 978-624-98342-2-4 |

---

| | | |
|---|---|---|
| Title | : | in the View of the History of Maruthamunai<br>I.A. Ameen (BA) (ADO)<br>Life & Social Service (1949 - 2005) |
| Author (C) | : | A.A.M.Malees |
| First Edition | : | 2023 January |
| Adress | : | No. 454, Zam Zam Road,Maruthamunai-03<br>(Sri-Lanka) |
| Email | : | maleesameen454@gmail.com |
| Whatsapp No | : | Malees Ameen - 077-2788950 |
| Published | : | Baithul Help Friends Circle (BHOFR)<br>Maruthamunai, Sri-Lanka |
| Printers | : | KidzMate - Maruthamunai |
| Cover Design | : | M.N.Satheel Mohamed |
| Type Setting | : | M.N.M.Naajith (BA, Hons) |
| Price | : | 1000/- |
| ISBN | : | 978-624-98342-2-4 |




என் அன்னை
யாசின் பாவா ஆயிஷாறாவ்

மற்றும்

என் தந்தை உயிருக்கும் மேலாக நேசித்த
சவளக்கடை, துறைநீலாவணை,
சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி மற்றும்
மருதமுனை, நற்பிட்டிமுனை, சொறிக்கல்முனை
விவசாயக் குடுபங்களுக்காக இந்நூலை
சமர்ப்பணம் செய்கின்றேன்.

## சிலோன் பல்கலைக்கழகத்தில் (BA )பட்டம்
## (பேராதனைப் பல்கலைக்கழகம்)



**ஐ.ஏ. அமீன்** (BA)

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ❖ பதிப்புரை | 12-13 |
| ❖ அணிந்துரை | 14-24 |
| ❖ முன்னுரை | 25-27 |
| ❖ ஐ.ஏ. அமீன் (BA,ADO) பற்றிய சுருக்க பார்வை | 28-30 |
| ❖ ஐ.ஏ. அமீன் (BA,ADO) பற்றிய அனுபவ பகிர்வு | 31-70 |
| ❖ ஐ.ஏ. அமீன் (BA,ADO) அவர்களின் குடும்பம் (சகோதரி மற்றும் சகோதரர் FLkg வாரிRகள்) | 71-75 |
| ❖ பல்கலைக்கழக சான்றிதழ் | 76 |
| ❖ சாரணர் இயக்கத்தில் இருந்த போது | 77-78 |
| ❖ விவசாய திணைக்களத்தில் சேவையாற்றும் போது | 79-85 |
| ❖ பாடசாலையில் பெற்ற விளையாட்டுச் சான்றிதழ்கள் | 86-87 |
| ❖ நீலாவணை, சவளக்கடை விவசாய மத்திய நிலையங்களில் சேவையாற்றும் போது எடுத்த நிழற்படங்கள் | 88-91 |
| ❖ பொலிஸ் இலிகிதராக மற்றும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனக்கடிதங்கள் | 92-94 |
| ❖ ஐ.ஏ. அமீன் (BA,ADO) நிழற்படங்கள் | 95 |
| ❖ இப் புத்தகம் வெளிவர ஆலோசனைகளும், வழிகாட்டலும் செய்த நல்லுள்ளங்கள் | 96-97 |
| ❖ மருதமுனை மாதிரி வரைபடம் | 98-100 |



## பதிப்புரை

**எம்.எச்.எம். றைசுல் ஹக்கீம் (*JP*)**
*Baithul Help Organization (for) Releif*
*Maruthamunai, Sri-Lanka*

*மருதமுனை ஆளுமைகளில் ஒருவர் I.A.அமீன் (BA)-(ADO) அவர்கள், மருதமுனையின் முதலாவது (BA) பட்டதாரியான இவர் ஒரு சமூக சேவையாளரும் ஆவார்.*


*எமது அமைப்பு உருவான காலப்பகுதியில் (**2002**ம் ஆண்டு) ஆலோசகராகவும், (BHOFR) பைத்துல் ஹெல்ப் ஓஹநேசன் (போர்) றிலீப் - மருதமுனை வழிகாட்டியாகவும் செயல்பட்ட நல்ல உள்ளம் அமீன் (BA) அவர்கள்.*

*எப்போதும் மற்றவரின் நலன்களில் அதிக ஈடுபாடு கொண்டவரும், விவசாய மக்களின் நலனுக்காகவும் ஊரின் வளர்ச்சிக்காகவும் மிகவும் தன்னை அர்ப்பணிப்பு செய்தவர்.*

*தேவையற்ற அலங்காரம் இல்லாத அவரது வாழ்க்கை அவரின் சிறந்த எடுத்துக்காட்டாகும்.*

‘பைத்துல் ஹெல்ப் நண்பர்கள் வட்டத்தின்’ வெளியீட்டில் **“மருதமுனை வரலாற்று நோக்கில் ஐ.ஏ.அமீன் (BA) (ADO) வாழ்வும், சமூகப் பணியும்”** என்ற நூல் வெளியிடுவதில் எம் அமைப்பு பெருமை அடைகிறது. இந்த நூலை ஆவணப்படுத்திய அவரது மகன் எமது அமைப்பின் ‘ஒருங்கிணைப்பாளர்’ “மலீஸ் அமீன்” அவர்களுக்கும் எமது அமைப்பின் (BHOFR) சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி, ஐ.ஏ.அமீன் (BA) (ADO) அவர்களின் தகவல்களை தந்துதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் அமைப்பின் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## அணிந்துரை

எம்.ஐ.எம். சலாஹுதீன் (ஆசிரியர்)
நூல் நிலைய வீதி, மருதமுனை-03

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன். எல்லாப் புகழும் அகிலத்தாரை படைத்துப் பாதுகாக்கும் றப்பாகிய அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது. ஸலவாத்தும், ஸலாமும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் கிளையார்கள், தோழர்கள், நபி வழி நடந்த அனைவர் மீதும் உண்டாவதாகவும்

அடுத்து மருதமுனையின் முதலாவது (BA) பட்டதாரியும் எனது உற்ற நண்பருமான ஐ.ஏ.அமீன் BA அவர்களது வாழ்வு பற்றியும் அவரது பணி பற்றியும் கூறும் இந்நூலுக்கான அதிகமான தகவல்களை சலாஹுத்தீன் ஆசிரியர்தான் வழங்க முடியும் என்ற அவரது குடும்பத்தாரின் எதிர்பார்ப்பு எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இன்ஷா அல்லாஹ் முடியுமானவரை நண்பர் ஐ.ஏ.அமீன் BA அவர்களின் வாழ்வும் பணியும் எவ்வாறிருந்தது என்பதற்கான அணிந்துரை வழங்குவதற்கு நான் ஆயத்தமாக இருக்கின்றேன்.

*1911ம் ஆண்டில் இருந்து 1965ம் ஆண்டு வரையான 55 வருட காலகட்டங்களில் மருதமுனையின் கல்வித்தரம் மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்பட்டது. இது மருதமுனைக்கு கல்விப் பஞ்சகாலம் என்றே கூறலாம். அக்காலகட்டத்தில்*

1. *பாடசாலைக்கு மாணவர்கள் சேரமாட்டார்கள். சேர்ந்தாலும் பாடசாலைக்கு வரமாட்டார்கள். அந்த மாணவர்களின் வீடுகளுக்கு வழக்கையாமார்கள் சென்று பிள்ளைகளை பயமுறுத்தித்தான் அவர்களை பாடசாலைக்கு பிடித்து வருவார்கள். இது மருதமுனையின் கல்வித்தரம் மிகவும் கீழ்மட்டத்தில் இருந்த காலகட்டமாகும்.*

2. *சுமார் 10 வருடங்களுக்குப் பிறகுதான் ஐந்தாம் வகுப்பு வரை சில மாணவர்கள் கல்வி கற்றார்கள். அந்தக் காலத்தில் 5ம் வகுப்பு கற்ற மாணவர்கள் பொலிஸ் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படு வார்கள். ஏனையோர் எட்டாம் வகுப்பு J.S.C வகுப்பு வரை படித்து சட்டம்பி வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவ்வாறு நமது ஊரில் ஆ.மு.ஷரிபுத்தீன் என்பவர் மட்டும்தான் 1924ம் ஆண்டு சட்டம்பியாக நியமிக்கப்பட்டு இருக்கிறார். இதுவும் மருதமுனையின் கல்வித் தரம் கீழ்மட்டத்தில் இருந்த காலப்பகுதிதான்.*

3. அடுத்து S.S.C வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு அதிலும் சொற்பமான மாணவர்களே கற்று S.S.C அரசாங்க பரீட்சைக்கு தோற்றினார்கள். அதில் 6 பாடங்கள் நடைபெறும். அதில் சிலர் ALL 'F' எடுத்து FAIL பெயில் ஆகுவார்கள். சிலர் சாதாரண சித்தி S எல்லாப் பாடங்களிலும் எடுத்து பாஸ் ஆகுவார்கள். அவர்கள் கல்விக் கந்தோருக்கு சென்று ஆசிரியர் வேலைக்கு பதிந்தால் ஆசிரியர் நியமனம் கிடைக்கும். சிலர் கிறடிட் என்றும் 'C' ஒன்றும் 'S' ஐந்தும் எடுப்பார்கள். சிலர் 2C 4S எடுப்பார்கள். சிலர் அரிதாகவே D என்னும் டிஸ்ரிங்ஸன் எடுப்பார்கள். அரிதரிது மானிடர் ஆதல் அரிது அதனிலும் அரிது கிறடிட் எடுப்பது. அதனிலும் அரிது டிஸ்ரிங்ஸன் எடுப்பது. அதனிலும் அரிது A/L படிப்பது என்ற கல்வி நிலை கல்விப் பஞ்சம்தான் அன்று காணப்பட்டது. ஒரே தடவையில் 6 பாடமும் பாஸ் பண்ண முடியாமல் மூன்று மூன்று பாடமாக இரண்டு தடவையில் சிலர் பாஸ் பண்ணுவார்கள். சிலர் 5 பாடமும் இரண்டு பாடமுமாக இரண்டு தடவைகளில் S.S.C பரீட்சை பாஸ் பண்ணுவார்கள்.

4. அடுத்து G.C.E. (O/L) என்ற பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டு அதில் 8 பாடங்களில் பரீட்சை நடைபெறும். அதிலும் நமது மருதமுனைப் பாடசாலையில் அதிகூடிய பரீட்சை பெறுபேறுகள் எடுக்கப்படுவதில்லை.

ஓரளவு இந்த பரீட்சையில் 8 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரியர் வேலை, இலிகிதர் வேலை கிடைக்கும். மற்றவர்கள் விவசாயம், கைத்தொழில் என்பவற்றில் ஈடுபட்டு வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இவ்வாறான குறைந்த கல்வித்தரமும், கல்விப் பஞ்சமும்தான் **1966**ம் ஆண்டு காலப்பகுதிவரை நமது ஊர்ப்பகுதியில் இருந்தது.

5. **1965**ம் ஆண்டுக்காலப்பகுதியில் நமது ஊரில் G.C.E. (A/L) என்னும் உயர்கல்வி இருக்கவில்லை. அதனால் G.C.E. (A/L) பற்றி நமது ஊரவர்களுக்கு தெரியாது. G.C.E. (A/L) உயர்தர கல்வி யாழ்ப்பாண மக்கள் தான் கற்பார்கள். இந்த உயர்கல்வியை கற்பதற்கு நமது ஊரில் யாருக்கும் தகுதியில்லை என்று சிலர் பேசிக் கொள்வார்கள். இவ்வாறு அவர்கள் பேசினாலும் பேசா விட்டாலும் **1945**ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து **1965**ம் ஆண்டு காலப்பகுதி வரை நமது பாடசாலையில் கல்வி கற்று வந்த மாணவர்களான

| | |
|---|---|
| A.H.M.மஜீது | A.L.M.தாஹிர் |
| S.A.S.இஸ்மாயில் மவுலானா | S.M.மூஸா |
| S.Z.M.சக்காப் மவுலானா | S.M.பீர்முஹம்மது |
| M.H.காதர் இப்றாஹிம் | M.I.M.சலாஹூதீன் |
| A.L.மீராமுஹைதீன் | S.M.மத்தீன் |
| A.செய்னுலாப்தீன் | A.M.பாறுக் |
| M.C.அகமது முஹைதீன் | I.A.அமீன் |
| S.L.இப்றாலெப்பை | |

ஆகிய நாங்களும் இன்னும் பலரும் குறைந்த தரக்கல்வியை மட்டும் கற்ற கல்விப் பஞ்ச கால மாணவர்களாக இருந்தோம். உயர்கல்வி கற்கும் சந்தர்ப்பமும் துணிவும் தேவையும் எங்களில் யாருக்குமே இருக்கவில்லை. அதனால் நாங்கள் யாருமே உயர்கல்வி வளர்ச்சிக்கு அந்த காலத்தில் எந்தப் பங்களிப்பும் செய்யவில்லை. கல்வித்தரம் குறைந்த ஆசிரியர்களாகவும், இலிகிதர்களாகவும் இருந்து கொண்டு எடுக்கும் சம்பளத்தில் தானும் தடியும் என்ற நிலையில் வாழ்ந்து வந்தோம். உயர்கல்வி கற்றவர்கள் இல்லாத மருதமுனைக் குளத்துக்கு நாங்களே சிறு சிறு அதிகாரிகளாகவும் ஊர்மக்களின் மதிப்புக்கு உரியவர்களாகவும் வாழ்ந்து கொண்டு இருந்தோம்.

ஆனால் நண்பர் ஐ.ஏ.அமீன் என்பவர் மட்டும் இவ்வாறான கல்வித்தரத்தை விரும்பாதவராக இருந்தார். அதனால் கல்வித்தரம் குறைந்த ஆசிரியராகவும், இலிகிதராகவும் வாழ்க்கையை அமைக்காமல் உயர்கல்வி கற்பதற்கு **1967**ம் ஆண்டு காலப்பகுதியில் துணிந்தார்.

G.C.E. (A/L) உயர்தர வகுப்பு கற்பதற்கு தகுதியான O/L றிசல்ட் அவரிடம் இருக்கவில்லை. அதனால் அல்-மனாரில் இருந்து விலகி **1967**ம் ஆண்டு மட்டக்களப்பு கோட்டமுனை மகா வித்தியாலயத்தில் சேர்ந்து O/L பரீட்சை எடுத்து

*A/L* வகுப்பு கற்பதற்கான திறமைச் சித்திகளைப் பெற்றார். இவ்வாறு உயர்கல்வி கற்பதற்கான முயற்சிகளை அல்-மனாரில் கற்ற நாங்கள் எவரும் செய்யவில்லை. நமது ஊரில் முதன் முதலாக உயர்கல்வி கற்பதற்கு முயற்சி மேற்கொண்டவர் நண்பர் அமீன் அவர்கள்.

அதன் பின்னர் மட்டக்களப்பு காத்தான்குடி மகா வித்தியாலயம், பட்டிருப்பு மகா வித்தியாலயம், சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆகிய மூன்று இடங்களிலும் **1967-1968** காலப் பகுதிகளில் *A/L* உயர்தர வகுப்பில் கற்று புவியியல், தமிழ், பொருளியல் ஆகிய பாடங்கள் மூன்றிலும் கிறெடிட் (*Credit*) சித்தி பெற்றார்.

**1970**ம் ஆண்டு இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைப்பிரிவில் பட்டப் படிப்புக்கு தெரிவு செய்யப்பட்டு **1972**ம் வருடம் மருதமுனையின் முதலாவது *B.A.* பட்டதாரியாக வெளியானார். இந்த 5 ஆண்டு காலத்திலும் அமீன் *B.A.* அவர்கள் தனித்து நின்று உயர்கல்விக்கான பளுவை தனியாக சுமந்தார். மருதமுனையின் கல்வித்தரம் மிகக் குறைவாக இருந்த 55 ஆண்டுகளின் இறுதியில், உயர்கல்வி கற்று முதன் முதலாக *B.A.* பட்டதாரி ஆகுவது சின்ன விடயமல்ல. பல்கலைக்கழக (*Discipline*)

நல்லொழுக்கம், அப்பியாசம் என்பன கூடிய காலகட்டம் அது. தொடர்ந்து நீண்ட தூரம் போக்குவரத்து செய்யும் கஷ்டம் வேறு. அனைத்தையும் வென்று அவர் மருதமுனையின் முதலாது B.A. பட்டதாரியாக வெளியாகியதால் ஐ.ஏ.அமீன் என்னும் அவரது பெயரை மருதமுனை மக்களே அமீன் B.A. என்னும் பட்டப் பெயராக மாற்றி அழைத்தார்கள்.

அவர் B.A. பட்டம் பெற்றதால் அமீன் B.A. என அழைக்கப்பட்டார். அவருடைய காலகட்டத்தில் இருந்த நாங்கள் B.A. பட்டம் பெற்றதால் O/L பட்டத்துடனேயே அனேகர் ஓய்வு பெற்றோம்.

இதுவரை அமீன் B.A. மருதமுனையின் முதலாவது B.A. பட்டதாரி ஆவதற்கான அவரது வாழ்வின் ஒரு பகுதியைப் பார்த்தோம்.

அமீன் B.A. அவர்களின் தந்தையார் பெயர் இப்றா லெப்பை மரைக்கார் இவர்களை தெரியாதவர்களே அன்று கிடையாது.

தாயாரின் பெயர் பாத்திமா
அமீன் B.A. அவர்களின் பிறந்த திகதி 13.08.1949
என்னுடைய பிறந்த திகதி 17.08.1949
அமீன் B.A. 4 நாட்கள் மூத்தவர்.

*1954 ஜனவரி மாதத்தில் தான் நாங்கள் இருவரும் நமது பாடசாலையில் சேர்க்கப்பட்டோம். 10ம் வகுப்புவரை அங்கேயே கற்றோம். 1965ல் பாடசாலையை விட்டு விலகினோம்.*

*இவர் தாய் தந்தையரை மிகவும் நேசித்தார். அவர்களது இறுதிக் காலத்தில் தந்தையார் கடும் சுகவீனம் அடைந்த காலம் முழுவதும் அவர்கள் மவ்த்தாகும் வரை நன்கு கவனித்தார். நமது ஊரில் உள்ள நேர்மையான மனிதர்களில் இவரும் ஒருவர்.*

*இவரது மனைவி ஆயிஷா ராவ், மக்கள் ஆகியோருடன் மிகவும் இரக்கம் உள்ளவராக வாழ்ந்தார்.*

*1975ல் இருந்து 1980 ஆண்டுவரை பதுளை பொலிஸ் காரியாலயத்திலும், கல்முனை பொலிஸ் காரியாலயத்திலும் பணியாற்றி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களினதும், பொலிஸ் உத்தியோகத்தர் களினதும் நன்மதிப்பை பெற்றிருந்தார். அவர்கள் இவரது பணியை மிகவும் பாராட்டினார்கள்.*

*1980ம் ஆண்டில் இருந்து ADO என்னும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தராக*

- *சேனைக்குடியிருப்பு விவசாய மத்திய நிலையத்திலும்*

- பெரியநீலாவணை விவசாய மத்திய நிலையத்திலும்
- சவளக்கடை விவசாய மத்திய நிலையத்திலும்
- அம்பாரை மாவட்ட விவசாய அலுவலகத்திலும்

13 வருடங்கள் கடமையாற்றி, சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் பாரபட்சம் இன்றி சேவை செய்தார். இவர் பணி புரிந்த அலுவலகங்களுக்கு நான் பலமுறை சென்று இவருடன் பேசிக் கொண்டிருப்பேன். இவர் மற்றவர்களின் பணத்துக்கு ஆசைப்படாத ஒரு நேர்மையாளராகவே செயல்புரிந்து 25.08.2005ம் ஆண்டு வபாத்தானார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி றாஜிஊன். இது இவரது வாழ்வு பற்றி குறிப்புகளும் இவரது பணியின் ஒரு பகுதியுமாகும்.

மருதமுனையின் வரலாற்று நோக்கில் இவர் செய்த மிகப் பெரும்பணி என்னவென்பதைப் பாருங்கள்.

1973ம் வருடம் மருதமுனையின் முதலாவது B.A. பட்டதாரியாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து அமீன் B.A. வெளியாகி வந்த பின்னர்தான் ஊர் மக்கள் விழிப்படைந்தார்கள். க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் எந்தப் பாடசாலைகளில் இருக்கிறது என்பதை தேடிப்பிடித்து தங்கள் பிள்ளைகளை உயர்கல்வி படிப்பதற்காக சேர்த்தார்கள். மருதமுனை

மகா வித்தியாலயங்களிலும் A/L வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மருதமுனை மாணவர்கள் கலை, விஞ்ஞான, கணித, வைத்திய, பொறியியல் பட்டதாரிகளாக வெளியாகத் தொடங்கினார்கள். இன்றும் வெளியாகிக் கொண்டே இருக்கிறார்கள். இதுதான் அவர் செய்த பெரும் பணியாக இருக்கிறது. இவர் செய்த இந்தப் பணிக்கான நன்றியை மறப்பவர்களுக்கு உய்வில்லை என்பது எனது கருத்து. கல்வித்தரம் குறைந்த காலப்பகுதியில் இருந்த ஆசிரியர்களான M.H.காதர் இப்றாஹீம், A.L.மீராமுஹைதீன், A.L.M.தாஹிர், S.M.மூஸா போன்ற பலர் M.I.M.சலாஹூதீன் போன்ற நாங்களும் G.C.E. (A/L) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்று பட்டப்படிப்பை மேற்கொண்டோம்.

M.I.M.சலாஹூதீன் ஆகிய நான் அமீன் B.A. அவர்களிடம் 1972ம் ஆண்டு A/L எடுப்பதற்காக பொருளியல் பாடத்தைக் கற்றேன். பொருளியல் பாடத்தை இலகுவாக சித்தியடைவதற்கான விதத்தில் பாடத்திட்டத்திற்கேற்ப அவர் பொருளியலைக் கற்பித்தார். “அமைப்பு மாற்றம்” என்னும் ஒரு புது விடயத்தையும் பொருளியல் பாடத்தில் அவர் கற்பித்தார். நான் 1972 காலப்பகுதியில் இருந்த அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட ஐந்தாண்டு திட்டம் என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் அகிலஇலங்கை ரீதியாக பங்குபற்றுவதற்கு கல்முனை

ஸாஹிறா கல்லூரி ஆசிரியர்கள் என்னைத் தெரிவு செய்தார்கள்.

அந்த ஐந்தாண்டுத்திட்டம் என்ற கட்டுரையை அமீன் B.A. பொருளாதாரப் பாடத்தில் எனக்கு கற்பித்த "அமைப்பு மாற்றம்" என்ற விடயத்தை அடிப்படையாக வைத்து எழுதினேன். ஐந்தாண்டுத் திட்டம் என்ற அந்த கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாக 1வது பரிசு எனக்கு கிடைத்ததையும் இந்த இடத்தில் நான் கூறுகிறேன்.

மருதமுனையில் வரலாற்று நோக்கில் இந்த அமீன் B.A. அவர்களின் இந்த பணிகளைப் பாராட்டுவது மிகவும் பொருத்தமானதாகும்.



## முன்னுரை


ஏ.ஏ.எம் மலீஸ் *(Q/S) (ETDI)*
*(Dip-in-Psychology)*
*Coordinator - BHOFR*


"நீ சந்திக்கும் ஒவ்வொரு நபருடனும் கருணையுடன் இரு அதுவே, உன்னை வழிநடத்தும்" என்ற என் தந்தையின் போதனையை நான் எப்போதும் கடைப்பிடிப்பவன். வாழ்க்கையில் மற்றவரை மதித்து கௌரவிக்கும் பண்பு அவரிடம் இயல்பாகவே காணப்பட்ட ஒன்று எனலாம். எல்லா மனிதர்களையும் சமமாக பார்ப்பது அவருடைய இன்னுமொரு சிறந்த பண்புக்குச் சான்றாகும்.

இப்பிரதேசத்தில் விவசாய மக்களுக்காக, அவர்களின் வாழ்வாதார எழுச்சிக்காக அவர்களது விவசாய காணிகளையும், குடும்ப பின்னணிகளையும் மிகவும் ஆழமாக வரையறுத்து சேவை செய்தவர் என் தந்தை.

எமது மருதமுனைப் பிரதேசத்தில் 1980ம் ஆண்டு காலப்பகுதியில் அறிவுத்துறை தேக்க நிலையிலும், வளர்ச்சி அடையாத நிலையிலும் இருந்த வேளை மாணவர்களை திரட்டி அவர்களுக்கு இலவசமாகவே பாடங்களைக் கற்றுக் கொடுத்தார். இந்தக் காலப்பகுதியில் மர்ஹூம் ஐ.ஹபீப் முஹம்மது என்

பெரியப்பா அவர்களும் இதில் பங்கு வகித்தார் என்பதை ஞாபகமூட்டுகின்றேன்.

எப்போதும் விவசாயிகளின் மீதும் அவர்களின் விவசாயத்தில் நிலவும் சவால்களை வெற்றி கொள்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சேவைகளை மேற்கொண்டார். இதற்கான 'நவியான குள சங்கம்' போன்ற சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அதேபோல் மருதமுனையின் "YMMA" தலைவராக இருந்து செயற்பட்டு 24 வீடுகளை மருதமுனை மக்களுக்காக கட்டிக் கொடுத்தார். மேலும் சுனாமி காலப்பகுதியில் மக்களுக்காக உலர் உணவுப் பொருட்களை விவசாய திணைக்களத்தின் ஊடாக பெற்று இன, மத, மொழி வேறுபாடுகளின்றி பகிர்ந்தளித்தார்.

இவ்வாறு பல சேவைகளை செய்த என் தந்தை ஐ.ஏ.அமீன் B.A. (ADO) அவர்கள் 2005 காலப்பகுதியில் அகால மரணமடைந்தார். இவரின் இந்த வாழ்க்கை பாதையை எதிர்கால இளம் சந்ததியினர் அறிவதற்காகவே மட்டும் இந்த புத்தகத்தை நான் வெளியிடுகின்றேன்.

இந்த நூலை வெளியிடுவதற்கு தகவல்கள் தந்துதவிய அனைத்து நண்பர்கள், என் தந்தையின் நண்பர்கள், இந்நூலுக்கு வாழ்த்துக்கள் தந்துதவிய கல்விப் பெருந்

தகைகள், இந்த நூல் உருவாக அறிவுகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய மருதமுனை ஹஸன் மற்றும் பாறுக் ஆசிரியர் சலாஹுதீன் ஆசிரியர் மற்றும் *BHOFR* தலைவர் றைசுல் ஹக்கீம் மற்றும் நண்பர் கவிஞர் முனாஸ் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“மருதமுனை வரலாற்று நோக்கில் ஐ.ஏ.அமீன் *(B.A.)* *(ADO)* அவர்கள் என்ற இந்நூலை வடிவமைத்த நண்பன் சதீல் முஹமமட் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நூலின் மூலமாக என் தந்தையின் நினைவுகளை உங்களுடன் சேர்ந்து மீட்டியவனாக இந்நூலை என் தாய் மற்றும் இப்பிரதேசத்தின் விவசாய குடும்பங்களுக்காக சமர்ப்பிக்கின்றேன்.

## ஐ.ஏ.அமீன் (B.A) (ADO) அவர்கள் பற்றிய சுருக்கப் பார்வை

பெயர் : இப்றாலெப்பை அஹமது அமீன்

தந்தை : இப்றாலெப்பை மரைக்கார்

தாய் : இஸ்மாலெப்பை பாத்துமா

பிறந்த திகதி : **1949.08.07**

தே.அ.அ.இல : **492202649V** பாடசாலைகள் :

- ஆரம்பக்கல்வி - தரம் 10ம் வகுப்பு வரையும் **(20.01.1984 - 01.07.1966)**
  மருதமுனை அல்-மனார் மகா வித்தியாலயம்

- G.C.E. (O/L) - G.C.E. (A/L) சித்தி
  மட்டக்களப்பு கோட்டமுனைமகா வித்தியாலயம்

- G.C.E. (A/L) Arts
  **01.07.1967 - 17.01.1968**
  மட்டக்களப்பு காத்தான்குடி மகா வித்தியாலயம் (இதைவிட்டு விலகி இடை நடுவில்)

- A/L படிப்பை மட்டக்களப்பு பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தார்.
  **24.01.1968 - 26.06.1968**
  இந்தப் பாடசாலையை விட்டு மீண்டும் விலகி

- யாழ்ப்பாணம் சுண்ணாகம்
  J/Skanda Varodaya College
  (A/L) படிப்பைத் தொடர்ந்தார். **(05.07.1968)**

- *இந்தப் பாடசாலையில் G.C.E. (A/L) பரீட்சையை எழுதி (புவியியல், தமிழ், பொருளியல்) ஆகிய பாடங்களில் (Credit) சித்தி எய்தினார்*

*பல்கலைக்கழகம் : **1970**ம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பைத் தொடர்ந்தார். **(1970-1972)** காலப்பகுதியில் பட்டப்படிப்பை முடித்தார்.*

*பட்டமளிப்பு விழா : **1973.03.19** கொழும்பில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது கல்வி அமைச்சராக இருந்த BADI-UD-DIN-MAHMUD பட்டமளித்து கௌரவித்தார்.*

*அரச சேவை ஆரம்பம் : **01.04.1975** இணைந்தது.*

1. *இலிகிதர் சேவைக்காலம் (பதுளை பொலிஸ் நிலையம்) - **(01.04.1975 - 31.12.1977)***
2. *கல்முனை பொலிஸ் நிலையம் **(01.01.1978 - 15.12.1980)***

*விவாகமான திகதி : **19.08.1978***
*மனைவி : யாசீன் பாவா ஆயிஷா றாவ்*

*விவசாய திணைக்களத்தில் இணைந்தது :*

1. ***15.12.1980***
   *(விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்)*
   *(ADO) **(15.12.1980 - 31.12.1993)***
   *(**13** வருட காலம்) சேனைக்குடியிருப்பு கமநல மத்திய நிலையம்*

*2. (01.01.1994 - 25.08.2005)*
*நீலாவணை கமநல மத்திய நிலையம் மற்றும்*
*சவளக்கடை கமநல மத்திய நிலையம்*
*(11 வருடகாலம்)*

*இறப்பு : 2005.08.25ம் திகதி விபத்து ஒன்றில் அகால மரணமடைந்தார்.*



கலாபூஷணம்
ஜனாப் ஏ.எம்.முஹம்மது பாறுக்
*B.A. Dip in Ed.*
ஓய்வு பெற்ற அதிபர் - *S.L.P.S - I*
மருதமுனை

## எல்லோராலும் உச்சரிக்கப்படும் நாமம் அமீன் (*BA*)

மருதமுனையின் வரலாற்றில் முதல் கலைப்பட்டதாரி என புகழப்பட்ட ஜனாப் ஐ.ஏ.அமீன் அவர்கள் என்னுடைய வகுப்பு நண்பன். நாங்கள் மருதமுனை அல்-மானர் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலங்கள் ஒரு பொற்காலமாகும். இவர் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் வகுப்பு நண்பர்களுடன் அன்பாகப் பழகி நன்மதிப்பைப் பெற்றவர். இவரின் நினைவாக வெளியிடப்படும் நூலுக்கு ஆசிரியுரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்.


“அமீன் பீ.ஏ” என்று எல்லோராலும் அழைக்கப்படும் அமீன் அவர்கள் இளமைக் காலத்திலிருந்தே மார்க்கப் மற்றும் மனித நேயமும் மிக்கவராக இருந்துள்ளதால் காலம் சென்ற மதிப்பிற்குரிய நண்பன் ஜனாப் ஏ.சி.ஏ.மாஜித் மவ்லவி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மருதமுனை வை.எம்.எம்.ஏ இயக்கத்தின் தலைவராக இருந்து செயல்பட்டார்.

*1978ல் வீசிய சூறாவளியினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மருதமுனை மக்களில் 24 பேருக்கு மிகவும் விரைவாக வீடு கட்டிக் கொடுப்பதற்கும், அவற்றில் ஒரு வீட்டுக்கு பதிலாக பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில் இயங்கி வந்த பாக்கியத்துஸ் ஸாலிஹாத் பள்ளி சூறாவளியினால் சேதமடைந்த போது அதனைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இயக்க உறுப்பினர்களின் விருப்பத்திற்கமைவாக ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்து உதவினார்.*

*பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறி பதுளை, கல்முனை ஆகிய இடங்களில் இலிகிதராகவும், பின்னர் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் கடமையாற்றி பதவி உயர்வு பெற்றார். தன் கடமையில் மிகவும் நேர்மையாக நடந்து கொண்டு நன்மதிப்பையும் பெற்றார். அதுமட்டுமல்லாது உயர்தர வகுப்பு மாணவர்களின் நலன் கருதி இலவச பாட வகுப்புக்களையும் நடாத்தி வந்தார். அன்னாரின் அகால மரணம் இறைநியதி என்றாலும் அவரின் ஈடேற்ற வாழ்வு சிறப்பாக இருக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.*

## மருதமுனை அல்-மனார் மகா வித்தியாலய ஜனாப் ஐ.ஏ.அமீன் பீ.ஏ. அவர்களின் வகுப்புத் தோழர்கள்

1. ஜனாப் ஐ.ஏ. அமீன்
2. ஜனாப் எஸ்.எம். அன்வர்
3. ஜனாப் ஏ.சி. மாஜித் மௌலவி
4. அல்ஹாஜ் எஸ்.எல். இப்றாலெவ்வை
5. அல்ஹாஜ் ஏ.எம். அப்துல் சமது
6. அல்ஹாஜ் ஏ.எம். றகுமான்
7. அல்ஹாஜ் வை.ஏ.எம். இப்றாகீம்
8. ஜனாப் எம்.எம்.ஏ. காதர்
9. ஜனாப் எம்.எம். இப்றாகீம்
10. ஜனாப் ஐ.எல்.எம். இப்றாகீம்
11. ஜனாப் எம்.எல்.ஏ. காதர்
12. அல்ஹாஜ் எம்.எல்.எம்.இஸ்மாயில்
13. ஜனாப் ஐ.எல்.எம். இஸ்மாயில்
14. ஜனாப் ஏ.எல்.எம். ஹனிபா
15. ஜனாப் எம்.எஸ்.எம். முக்தார்
16. ஜனாப் ஏ.ஆர். உதுமாலெவ்வை
17. ஜனாப் ஏ.எம். முகம்மது பாறூக்
18. ஜனாப் எம்.ஏ. நெயினா முகம்மத்
19. ஜனாப் எம்.எம். மன்சூர்
20. ஜனாப் எஸ்.ஏ.ஆர்.எம்.எஸ்.காசிம் மவ்லானா
21. ஜனாப் வி.கே. நூகுலெவ்வை (நற்பிட்டிமுனை)
22. ஜனாப் ஏ. ஜப்பார் (கொளனி)
23. ஜனாப் ஏ. றசீத் (சாய்ந்தமருது)
24. ஜனாப் எம். புஹாரி மவ்லானா (ஏறாவூர்)



*A.R.அப்துல் ஹமீட்*
ஓய்வு பெற்ற புள்ளிவிபரத்
திணைக்கள அதிகாரி
மருதமுனை

## YMMA அமைப்பில் அமீன் BA யின் சேவைகள்

1972ம் ஆண்டு காலப்பகுதியில் கமு/அல்-மனார் மகா வித்தியாலயத்தின் பக்கத்தில் உள்ள கடையறை "YMMA" அமைப்பின் காரியாலயமாக திறக்கப்பட்டு "YMMA" அமைப்பின் முதலாவது திறப்பு விழா நடந்தது. இதன் தலைவராக அமீன் (BA) அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார்கள். இதன் போது அமைப்பின் உயர்பீட உறுப்பினர் ஏ.சி.ஏ.மாஜித் மௌலவி அவர்கள் வழிநடத்தினார்கள்.

இதன் பிற்பாடு 1978ம் ஆண்டு சூறாவளி அனர்த்தத்தின் போது மருதமுனை மிகவும் பாதிப்படைந்தது. உடனடியாக செயற்பட்ட அமீன் (BA) அவர்கள் 24 வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்காக "YMMA" ஊடாக அமைத்துக் கொடுத்தார்கள். இதன்போது நிருவாக உறுப்பினர்களாக இவ்வீட்டுத் திட்டத்தை முன்னின்று நானும், பாறுக் சேர் மற்றும் அபுல் ஹூதா சேர், மாஜித் மௌலவி (உயர்பீட உறுப்பினர்) ஒன்றாக இவ்வீடுகளை அமைப்பதில் ஈடுபட்டோம்.

இந்த காலப்பகுதியில் மருதமுனையின் கல்வித்துறை பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. என்னிடம் ஹமீட் நமது ஊரில் கல்வித்துறையை மேலோங்கச் செய்ய வேண்டும். ஏன் மருதமுனையின் கல்வித் துறையில் எழுச்சியை ஏற்படுத்த முடியாது என்று அமீன் (BA) யோசித்தார்.

எஸ். மனார்த்தீன் (லோயர்) உம், நானும் மருதமுனை கல்வி முன்னேற்ற சம்பந்தமாக மன்சூர் (MP) யிடம் சென்ற போது எங்கள் ஊரில் மட்டும் கல்வி வளர்ச்சி மோசமாக இருக்க காரணம் என்ன? பாடசாலைகளில் அபிவிருத்தியை மேலோங்கச் செய்ய வேண்டும் என்று அமீன் (BA) கேட்டுக் கொண்டார். மன்சூர் (MP) உம் உற்சாகமாக எங்களுக்கு நல்லதொரு பங்களிப்பை தருவதாகச் சொன்னார்.

**1978**ம் ஆண்டு சூறாவளி அனர்த்தம் ஏற்பட்டதன் பிற்பாடு அந்த நேரம் ஜனாதிபதியாக இருந்த J.R.ஜெயவர்த்தன படித்த பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தை கொண்டு வந்தார். மன்சூர் (MP) அவர்கள் கூட்டம் ஒன்றை மத்திய தைக்கா பள்ளிக்கு பக்கத்தில் போட்டு மருதமுனையில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு சம்பந்தமாக அறிவுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் (O/L) படித்துக் கொண்டிருந்த நான் பிற்பாடு கல்லடி சிவானந்தா மகா வித்தியாலயத்தில் (A/L) படிப்பை மேற்கொண்டு இருந்தேன். அம்பாரை மாவட்டத்தில் எனக்கும் ஹீதா அவர்களுக்கும் "வேலை வங்கித் திட்டம்" இன் கீழ் அம்பாரை கச்சேரியில் "புள்ளிவிபரத் திணைக்கள அதிகாரியாக" வேலை கிடைத்தது. இதை கேள்வியுற்ற மன்சூர் (MP) அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

"YMMA" கருத்தரங்கு கடற்கரையை அண்டிய பகுதியில் நடைபெற்ற போது கொழும்பில் இருந்து அதிகாரிகளை அழைத்து வந்து நிகழ்ச்சித் திட்டங்களை மருதமுனைக்கு அபிவிருத்திகளை ஏற்படுத்திக் கொடுத்த அமீன் (BA) என்றும் மறக்க முடியாத ஒருவர்.

இதேபோல் இவரது சகோதரர், ஐ.ஹபீப் முஹம்மது அதிபர் அவர்களும், வதூத் சேர், கமறுத்தீன் சேர் அவர்களும் எனக்கு படித்துக் கொடுத்தார்கள். அவர்களின் நினைவுகளையும் இத்தருணத்தில் ஞாபகப்படுத்துகின்றேன்.

YMMA அமைப்பின் *1978.06.24*ம் திகதி அங்குரார்ப்பணகூட்டம் நடைபெற்ற போது சமூகமளித்தோர். (நிர்வாகம்)

1. ஜனாப் ஐ.ஏ. அமீன்
2. ஏ.எம்.எம். பாறூக்
3. எஸ்.ஏ.ஆர்.எம். செய்யது மவ்லானா
4. எப்.எம்.ஏ. அன்சார் மௌலானா
5. ஏ.சி.ஏ. மாஜித் மௌலவி
6. ஏ.ஆர்.ஏ. சத்தார்
7. எம்.சி.எம். இஸ்மாயில்
8. என்.எம்.எம். அமீன்
9. என்.எம்.எம். இஸ்மாயில்
10. ஏ.ஆர்.ஏ. ஹமீட்
11. ஐ.எல்.எம். அக்றம்
12. எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மவ்லானா
13. எஸ்.எச்.எம். அக்பர்
14. ஏ. அபுல்ஹூதா
15. எம்.எம். நக்ஷபி
16. எம்.எம். சுபியான்
17. எம்.சி.எம். அப்துல் காதிர்
18. எஸ். மனார்த்தீன்
19. ஏ.ஆர்.எம். தௌபீக்

இவர்களைக் கொண்டு ஒரு நிர்வாக சபை அமைக்கப்பட்டது.

1. ஐ.ஏ. அமீன் (BA) - தலைவர்
2. எப்.எம்.ஏ. அன்சார் மௌலானா - செயலாளர்
3. ஏ.ஆர்.ஏ. சத்தார் - உபதலைவர்
4. எஸ்.ஏ.ஆர்.எம்.செய்யது மவ்லானா- உபதலைவர்
5. என்.எம்.எம். அமீன் - உப செயலாளர்
6. எஸ்.எச்.எம். அக்பர் - பொருளாளர்
7. அல்ஹாஜ் எஸ்.செட்.எம். மசூர் மவ்லானா - போசகர்
8. முகம்மட் செயின் (JP) - போசகர்
9. ஏ.ஆர்.எம். ஹமீட் - (24) வீட்டிற்கான ஒப்படைக்கப்பட்டன.
10. எம்.எஸ். ஐயூப் (JP) - ஆலோசகர்
11. ஆ.மு. புலவர்மணி ஷரிபுத்தீன் - ஆலோசகர்

பின்னர் செயலாளராக ஏ.எம்.எம். பாறுக் அதிபர் நியமிக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டார்கள்.



மௌலவி முஹம்மது ஜலீல்
ஜவ்சன் அஹமட் (உலூமி)
மருதமுனை

## மரணித்த உதய சூரியன்

மறை என மாநபி என உலகிற்களித்த வல்லவன் இறைவனை போற்றி, வஞ்சணத்தின் ஜோதி நபி மீது வங்கநீராய் ஸலவாத்தும் ஸலாமும் உரைத்தபடி

"உங்களில் மரணித்தவர்களின் நல்ல விடயங்களை நினைவுகூறுங்கள்"
என்ற மாநபியின் மகத்தான பொன் மொழியை நினைவுகூர்ந்தவனாக.

மலீஸ் அமீனின் இம்மகத்தான பணிக்கு முதலில் முத்தான, முதன்மையான வாழ்த்துக்களையும் பிரார்த்தனைகளையும் செய்து கொண்டு துவங்குகிறேன்.

மருதமுனை வரலாற்றில் அதன் புகழையும் மேன்மையினையும் தொலைதூரம்வரை கமளச் செய்த பலர் இன்றும் எம்மோடு இருக்கிறார்கள். இன்னும் பலர் இறையடி எய்துவிட்டார்கள் இருப்பினும் அவர்கள் புகழ் ஒரு போதும் மங்கிப் போனதாக நான் காணவில்லை. ஏதோ ஒரு இடத்தில் அல்லது விடயத்தில் பிரதிபலித்து நிற்பதென்பதே யதார்த்தமாகும்.

அவர்களின் வாழ்க்கை சரிதங்களையும், சமூகப் பணிகளையும், செய்த தொண்டுகளையும் பெற்ற அடைவு மட்டங்களையும் ஆவணப்படுத்த வேண்டிய தேவையும் அவைகளை வரும் இளம் சமூகத்தின் சிந்தையில் உதிக்கச் செய்வதுமான அறப்பணி எம்மவர்கள் மீது அல்லது எழுத்தாளர்கள் மீது இன்றியமையா கடப்பாடாகும். அதிலும் குறிப்பாக உடனிருந்தவர்களின் அனுபவப் பகிர்வுகளை தொகுப்பாக்கம் செய்வது என்பது காலத்தின் தேவையாகும்.

அப்பணியை இன்று எம்மில் பலர் செய்து வருவதையும் அவர்களின் தொகுப்புகள் மிக்க வரவேற்பு பெறுவதையும், அவை வரலாற்று ஆவணமாக பலரால் புரட்டப்பட்டு பல செய்திகள் திரட்டப்படுவதையும் காணக்கூடியதாகவே இருக்கிறது. அந்த வரிசையில் தன் தந்தையின் சமூகப் பணிகளும், வாழ்வியல் யதார்த்தங்களும் உலகிற்கு பறைசாற்றப்பட வேண்டும். இளம் தலைமுறைகள் அவர் பற்றியதான செய்திகளை அறிய வேண்டும் என்ற இலக்கை நோக்கி நகர்ந்து கவிஞர் எழுத்தாளர் மலீஸ் அமீன் அவர்கள் வெற்றிநடை போடுவதைக் காணக் கிடைக்கிறது.

இந்த ஆவண புத்தாக்கம் ஏலவே செய்து முடித்திருக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தும் கூட

நாம் அப்பணியை செய்ய மறந்ததன் விளைவாக இளம் எழுத்தாளர் மலீஸ் அமீன் தனித்து நின்று இதை செவ்வனே செய்து முடிக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் "மருதமுனை வரலாற்றை நோக்கி" என்ற இந்த நூலை பிரசவிக்கிறார்.

இந்நூலும் மருதமுனை வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமையும் என நம்புகிறேன்.

நூலின் கருப்பொருளாகிய இப்றாலெப்பை மரைக்கார் அமீன் B.A. (ADO) அவர்கள் பற்றிய கருத்தாடல் என்பது என்னைப் பொறுத்தவரையில் செவியேறலாக கேட்டவைகளையும் நம்பகமான பலர் சொல்ல அவர்களின் பேச்சு மீது கொண்ட நம்பிக்கையின் விளைவாகவும் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலும் சில விடயங்கள் இங்கு பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இப்றாலெப்பை மரைக்கார் அமீன் B.A. (ADO) என்பவரின் வகிபாகம் என்பது பெருங்கடல் போன்றது அதன் ஆழத்தாலும் அகலத்தாலும்.

ஆழத்தால் அவரை ஆழ்ந்து சிந்திக்கின்ற போது படைத்த இறைவனை அனுதினமும் இறைஞ்சக் கூடிய சாதுவான குணம் படைத்த ஒருவராக மட்டுமல்லாது தேவைக்காக மட்டும் பிறரோடு

*பேசுகின்ற முறையும் பணிவாக நடந்து கொள்ளும் நடத்தையும், பிள்ளைகளின் நல்ல தகப்பன் என்ன விடயங்களையும் கேட்கின்ற போது இப்படியான மனிதர்களை நாம் சந்திக்கவில்லையே என்ற ஒருவகை தாக்கத்தோடு கூடியதான ஏக்கத்தை ஏற்படுத்துகிறது.*

*அகலத்தால் அவரது செயற்பாடுகளை பார்க்குமிடத்து இரு எண்கருக்கள் மூலமாக அவைகளை நான் நோக்குகிறேன்.*

1. *வாழ்வியல் நிலை*
2. *சமூகப்பணி என்பனவாகும்.*

1. *வாழ்வியல் நிலை :*
   *வாழ்வியல் நிலையைப் பொறுத்தவரையில் இப்றாலெப்பை மரைக்கார் மற்றும் இஸ்மா லெப்பை பாத்திமா தம்பதியினருக்கு **1949**ம் வருடம் ஆவணி மாதம் **13**ம் திகதி பிறந்ததில் இருந்து அவர் மரணிக்கின்ற வரையான வாழ்வியல் யதார்த்தங்களையும் முன்னேறச் சென்ற வழிமுறைகளையும் கல்வியில் அடைந்து கொண்ட அடைவு மட்டங்களையும் தொழில் ரீதியான முன்னேற்றங்களையும் மக்களோடு பழகிய விதத்தினையும் சொல்வதாக அமைந்திருக்கும்.*

   *இப்றாலெப்பை மரைக்கார் அமீன் B.A. (ADO) அவர்கள் கல்வி மீது கொண்ட அக்கறையும்*

அதற்காக இரவு பகலாக செய்த முயற்சிகளும் மிக்க போற்றப்பட வேண்டியது என்பதை சில துணுக்குகள் மூலமாகவும் ஊர் பிரமுகர்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ள கிட்டியது என்பதே கூடுதல் தகவல்.

ஆரம்ப நிலை கல்வியை தனது சொந்த ஊரில் கற்று அன்றைய காலங்களில் மேற்படிப்புக்கு பிரபல்யமாக இருந்த பல பாடசாலைகளில் (இடங்களில்) சிரமங்கள் பாராது தமது கல்வியை பெரும் சவாலுக்கு மத்தியில் தொடர்ந்தது இங்கு அடிக்கோடிட்டு காட்டப்பட வேண்டிய சிறப்பம்சமாகும்.

இதன் விளைவாகவே ஊரின் முதலாவது B.A. பட்டதாரி என்னும் பெயர் நாமத்துக்கு சொந்தக்காரர் ஆகிப் போகிறார். இன்றுவரை அது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு இருப்பதும் நிஜமே.

கல்வி மீது கொண்ட கூடுதல் ஈர்ப்பினால் 1970ம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு 1973ம் ஆண்டு காலப்பகுதி வரையில் கல்வி கற்று வெளியேறக்கூடிய வாய்ப்பு கிடைத்திருந்தது.

இன்னும் மேன்மை கொள்ள வேண்டிய சிறப்பம்சமாக 1973ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டதாரி என்ற கௌரவத்தினை பதியுத்தீன் மஹ்மூத் அவர்களினால் பெற்றுக் கொண்டார். ஆனால் இப்பட்டம் மறுபுறத்தில் மருதமுனையின் முதல் பட்டதாரி என்ற மகுடத்தைப் பெற்றுக் கொடுத்தது.

இதன் பிற்பாடு அரசு சேவைகளில் தனது தொழில் நிமிர்த்தம் பல்வேறுபட்ட பதவிகளில் பதவி வகித்து சிறப்பான சேவையினை செய்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பதுளை பொலிஸ் நிலையம் மற்றும் கல்முனை பொலிஸ் நிலையங்களில் இவரின் சேவைகள் பாராட்டத்தக்கது.

அத்தோடு மட்டும் நின்று விடாது மேலும் தொடர்ந்த இவரது பணி விவசாய திணைக்களத்தோடு ஒன்றித்ததாக சுமார் 24 வருட காலம் தொடராகிப் போனது என்ற தகவல்களையும் என்னால் திரட்டிக் கொள்ள முடிந்தது.

2. சமூகப் பணிகள் :

இவரது சமூகப் பணிகளை ஆராய்கின்ற போது முதல் கட்டமாக பாடசாலை காலங்களில் இருந்தே சிறந்த ஒரு சாரணராக இவர் கடமையாற்றி இருப்பது இவரின் சமூகப் பணிக்கு சான்று பகர்கிறது.

அதற்குண்டான புகைப்பட ஆதாரங்களும் அத்தாட்சிப்பத்திரங்களும் இன்றளவும் பாதுகாக்கப்படுவது மறுப்பாளர்களின் குறைகூறலில் இருந்து விலகி நிற்கிறது.

மேலும் தன்னுடைய மரண காலம் வரை அம்பாரை மாவட்ட விவசாய குடும்பங்களின் அபிவிருத்திகளோடும் அதன் முன்னெடுப்பு செயற்பாடுகளோடும் அவரது பணி பின்னி பிணைக்கப்பட்டிருந்தது. அவர் மேலும் சமூகத்தின் மீது கொண்டிருந்த அக்கறையை நன்கு புலப்படுத்தி நிற்கிறது.

அப்படியாக ஒரு நல்ல மனிதனை மருதமுனை மண் இழந்தாலும் அவர் பணிகளையும், பெற்ற புகழ்ச்சிகளையும் மறந்து போகாது என்பது ஆணித்தரமான உண்மையாகும்.

அவரை இறைவன் பொருந்திக் கொண்டு அவர் சேவைகளையும் எண்ணங்களையும் ஏற்று சுவனபதியில் வாழ வைப்பானாக.



ஏ.பி. அபுல் ஹஸன்
(தச்சுத்தொழிலாளர்)
மருதமுனை

## நல் உள்ளம் கொண்ட அமீன் சாச்சா

அமீன் சாச்சா மிகவும் வித்தியாசமான நன்நடத்தை உள்ள மனிதர். அவதூறு பேசாத மனிதர்களில் இவரும் ஒருவர். தன் முயற்சியால் தன் காரியத்தை முடிக்கும் திறமை உள்ளவர்.

1978ம் ஆண்டு சூறாவளி அனர்த்தத்தின் போது சாச்சாவின் தலைமையில் முகைதீன் பாவா (சீனி ஓடாவியார்) என் தந்தையின் வழிநடத்தலில் கிட்டத்தட்ட 24 வீடுகளுக்கு மேலாக மர வேலைகள் அனைத்தும் நடைபெற்றது. எனக்கு அப்போ 08 வயதிருக்கும். நானும் இந்த "YMMA" வேலைத்திட்டத்தை செய்த போது பார்த்த ஞாபகம் இருக்கிறது.

அமீன் சாச்சா இவ்வாறான பல சமூக சேவைகளையும் செய்து மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்காகவும் அர்ப்பணிப்புடன் பங்காற்றியுள்ளார்.



கவிஞர் எழுத்தாளர்
மருதமுனை
ஏ.எம். முனாஸ்

## எல்லாப் புகழும் இறைவனுக்கு!

ஐ.ஏ.அமீன் அவர்கள் (BA) (ADO)

மெருதுவான மனப்பாங்குடையவர், புன்னகை நிறைந்த முகம், பழகுவதற்கு சிரமமில்லாது ஒட்டிக் கொள்ளும் முத்து. அன்பான வார்த்தைகளின் சொந்தக்காரர் உயர்ந்த சிறந்த பண்புகள். உள்ளம் கவர்ந்த மாமனிதர் இலகுவில் மறக்க முடியாத தடம். சமூகப்பற்று சமூக சேவைகள் என தன்னை உருக்கி எடுத்து பொது நலன்களில் திளைத்து மருதமுனை மண்ணின் மணம் வீசக்கூடிய ஆளுமைகளில் தடம் பதித்து அப்பணியில் தன்னை நம்பிக்கையாய் அர்ப்பணித்து செம்மையாக செய்து வெற்றிகளைக் காண்பித்தவர். இவரின் சேவைகள் இம்மண்ணில் மங்காது மாறாது மறையாது மக்கள் மனங்களில் பேரானந்தத்தில் நிலையாய் நிற்கின்றது. ஆனந்தத்தின் வெளிப்பாடுகளாய் அல்ஹம்து லில்லாஹ்.

மருதமுனையின் மாண்பும் மகத்துவமும் மருதமுனை ஈன்றதிலகம் அமீன் அவர்கள் மருதமுனையைப் பிறப்பிடமாகவும் வதிப்பிடமாகவும் கொண்டவர். இம்மண்ணின் வாசம் வீசும் முதலாவது B.A.

பட்டதாரியாகவும் மருதம் தந்த நேசமாகவும் இவர் பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றவர் மருதமுனையின் பேசு பொருள் முக்கியமான ஆளுமைகளில் ஒருவர். உன்னொளி பாய்ச்சி உயர்வினைத் தந்தாய் கள்ளம் கபடமில்லாக் கனிதலில் இனிதல் செய்தாய்.

*அமீனின் சேவையடா*
*இதயத்தில் கதைத்ததடா*
*மனங்களில் பரவியடா*
*நல் மணி பூத்ததடா*

*ஆனந்தம் மொழியாகி*
*அனைவர் மனதிலும் நடமாடி*
*பாருலகம் பெறுகின்ற*
*பற்பல வடிவமடா*

*அற்பணிப்புத் திறன்களை*
*அள்ளி வீசும் தோற்றத்தை*
*வள்ளலாம் கருணையோடு*
*வடிவாய் அளித்த சேவகனே (டா)*

*இதயம் இனிப்பாய் மாறுதடா*
*இன்னல் களையத் தீருதடா*
*பூவும் காயாய் மாறுமடா - உன்*
*புகழும் பாட்டாய் ஆகுமடா*

*தெவிட்டா இனிய தேனாய்*
*தென்றலுக்கு இனிய விருந்தாய்*
*சேவை புரிந்த ஞானமடா*
*சிறப்பு உமக்கு சாருமடா*

*வாழும் நெறிகள் கூறுதடா*
*வாஞ்சையெழப் பாடுதடா*
*நாலும் நீயாய் ஆகுதடா*
*நானில மீதிலே தெரியுதடா*

*எங்கும் ஒலிக்கும் நாமமடா - நீ*
*இதயம் திறக்கும் வானமடா*
*பொங்கும் புதிய எழிலோடு*
*பொன்னொளியாய் நித்தம் வந்தாயடா*

*இப்றாலெப்பை மரைக்கார் இஸ்மாலெப்பை பாத்தும்மா தம்பதியருக்கு 1946ம் ஆண்டு ஆவணி மாதம் 13ம் திகதி இரண்டாவது மகனாய் உதயமானார். சிறுபராயத்தில் இவரின் திறமைகளை கண்டு வியந்து போன பெற்றோர்கள் இவரின் எதிர்காலம் சிறந்த ஒன்றாய் திகளும் என்பதை அடிக்கடி ஞாபகமூட்டியவர்களாகவும் ஆர்வப் படுத்தி ஆதரவாகவும் பிரார்த்தனை செய்பவர் களாகவும் இருந்துள்ளார்கள்.*

கல்விதனில் கரைசேர்த்தும் கண்ணியமான அதிபர்கள் ஆசான்கள் நிறைந்த பாடசாலை பல பட்டதாரிகளை உருவாக்கி வெளியாக்கி சாதனையின் ஒன்றாய் உயர்வான மாமனிதர்களை அன்றும் இன்றும் பேசும் அளவிற்கு உயர்த்தி உயரமான துறைகளில் பெருமைகளைத் தேடித் தந்த பாடசாலை தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்து மாணவச் செல்வங்களுக்காக அரும்பாடுபட்டு வருகின்றது. தன்னை அர்ப்பணித்து ஒரு தொண்டனாய் இந்த அல்-மனார் மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக்கல்வியை அமீன் அவர்கள் **20.01.1954**ம் ஆண்டு தொடக்கம் **01.07.1966**ம் ஆண்டு தரம் பத்து வரைக்கும் கற்றார். பாடசாலைக் காலங்களில் சிறந்த ஒழுக்கமுடையவர் ஆகவும் நற்பண்பு நன்நடத்தை சிறந்த மாணவர் இற்கான பாராட்டுக்களும் பரிசுகளும் பெற்றார்.

பின்னர் தன் கல்வியை மட்டக்களப்பு கோட்டமுனை மகா வித்தியாலயத்தில் **19.02.1967**ம் ஆண்டு தொடக்கம் **03.06.1967**ம் ஆண்டு வரைக்கும் G.C.E. O/L கற்றார். G.C.E. O/L சித்தியடைந்த பின்னர் மட்டக்களப்பு காத்தான்குடி மகா வித்தியாலயத்தில் **01.07.1967**ம் ஆண்டிலிருந்து **17.07.1968**ம் ஆண்டு வரைக்கும் G.C.E. A/L (Arts) சித்தி பெற்று............

இப்பாடசாலையை விட்டு விலகி மட்டக்களப்பு பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் **24.01.1968**ம் ஆண்டு தொடக்கம் **26.06.1968**ம் ஆண்டு வரைக்கும் *A/L* பாடத்தைத் தொடர்ந்தார். பின்னர் அப்பாடசாலையிலிருந்து விலகி யாழ்ப்பாணம் சுண்ணாகம் *J/Skanda Varodaya College* இல் *A/L* படிப்பைத் தொடர்ந்தார். இப்பாடசாலையில் *G.C.E. A/L* பரீட்சை எழுதி (புவியியல், தமிழ், பொருளியல்) ஆகிய பாடங்களில் சித்தி எய்தார். பாடசாலைக் காலங்களில் சிரமங்கள் சிக்கல்கள் ஏற்பட்ட போதிலும் தன் விடா முயற்சியால் இறைவனின் அருளால் **1970**ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை தொடர்ந்தார்.

**1973**ம் ஆண்டு **03**ம் மாதம் **13**ம் திகதி கொழும்பில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது கல்வி அமைச்சராக இருந்த *BADI-UD-DIN-MAHMUD* பட்டமளித்து கௌரவித்தார். இதன் பிற்பாடு **1973**ம் ஆண்டு **01.07.1975**ல் அரச சேவையில் இணைந்து கொண்டார்.

1. இலிகிதர் சேவைக்காலம் பதுளை பொலிஸ் நிலையம் (**01.04.1971**ல் இருந்து **31.12.1977** வரைக்கும்)
2. கல்முனைபொலிஸ் காரியாலயம் **01.01.1978**ல் தொடங்கி **15.12.1980** வரைக்கும்

*திருமணபந்தம்*

***1978*ம் ஆண்டு ஐப்பசி மாதம் *19*ம் திகதி ஆயிஷா ராவ் என்பவரை திருமணம் செய்து கொண்டார். ஆறு பிள்ளைகளின் தந்தையாகவும் சிறந்த குடும்பத் தலைவராகவும் நல்ல கணவராகவும் குடும்பத்தை வழிநடாத்தினார். பின்னர் *1980.12.15*ம் திகதி விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தராக (ADO) சேனைக்குடியிருப்பு விவசாய மத்திய நிலையத்தில் பணியில் இணைந்து கொண்டார். *1993.12.31* வரைக்கும் (*13* ஆண்டுகள்) சேவையாற்றினார்.*

*அதன் பிற்பாடு நீலாவணை விவசாய மத்திய நிலையத்திலும் மற்றும் சவளக்கடை விவசாய மத்திய நிலையத்திலும் ADO ஆக **1994.01.01**ம் ஆண்டில் இருந்து **25.08.2005**ம் ஆண்டு வரைக்கும் பணி புரிந்தார்.*

*இவரின் சேவைக்காலங்களில் விவசாய அபிவிருத்திக்கு உட்பட்ட குளங்கள். பாண்டிருப்பு, மருதமுனை, சேனைக்குடியிருப்பு, துறைநீலாவணை, நீலாவணை இவ்வூர்களை அண்மித்திருத்த சில குளங்கள் பெரிய குளம், சுரிக்குளம், நவியான் குளம், வட்டிக்குளம், கரைச்சக்குளம், ஆவாங்குளம், மவ்லயார் குளம், போடியார் குளம், கரையாகுளம், தாமரை மடுவுக்குளம் இன்னும் சில குளங்கள் இருந்தன. சேவைக்காலங்களில் நேர்த்தியான பணிகளை செய்து தமிழ் மக்களிடத்திலும் நல்ல*

மதிப்பையும் வரவேற்பையும் பெற்றவர் அமீன் அவர்கள்.

